திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகிறேன். அதை அரசின் கவனத்திற்கும் கொண்டு வரவிரும்புகிறேன். இன்று பம்ப் செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுப்பதைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 2,61,000 அப்ளிகேஷன் இருக்கின்றன என்று சொல்லப் படுகிறது. இவைகளுக்கு எல்லாம் கனெக்ஷன் கொடுப்பதாக இருந்தால் மொத்தம் 9 வருஷம் ஆகும் என்கிற விவரங்களை விவரம் தெரிந்தவர்கள் சொல்கிறார்கள். இப்போது நான் உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது விவசாயிகள் பம்ப்செட்டுகள் வாங்குவதற்காக வங்கிகளில் இருந்து கடன் பெற்று இருக்கிறார்கள். அந்த வகையில் ஆயிரக்கணக்கான ரூபாய்களை விவசாயிகள் பெற்று இருக்கிறார்கள். அந்தக் கடன்களைப் பெற்று பம்ப் செட்டு வாங்கியவர்களுக்கு இன்னும் கனெக்ஷன் கொடுக்கவில்லை. அதன் காரணமாக அவர்கள் அதைப் பயன்படுத்த முடியவில்லை. இருப்பினும் அந்தக் கடனுக்கு அவர்கள் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது. நீங்கள் போட்டு இருக்கும் மூனு ஆஃ கமிட்டி கொடுத்துள்ள பரிந்துரை களில் முக்கியமான பரிந்துரை ஒன்று இந்தக் கடனை ரத்து செய்ய வேண்டும். இணைப்பு கொடுக்காதது மின்சார இலாகா தவறு. அதற்காக விவசாயிகளிடமிருந்து வட்டிப்பணம் வாங்கு வது நியாயமல்ல. அதை ரத்து செய்யவேண்டும் என்று சொன்ன தாகத் தெரிகிறது. ஆகவே, மின்சார இலாகா செய்த தவறு காரணமாக விவசாயிகள் வட்டி கட்ட வேண்டிய நிலையைத் தவிர்க்கும் வகையில், அந்த வட்டியை அரசு ரத்து செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது என்னுடைய துறை சம்பந்தமானது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேரவை ஒத்தி வைப்பது குறித்த தீர்மானத்தை மொழிவார்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3, அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"பேரவை விதி 25(1)—ன் கீழ், பேரவை இன்று ஒத்திவைக்கப் பெற்று, மீண்டும் பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கூடலாம்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.